International Journal of Linguistics and Computational Applications (IJLCA) ISSN 2394-6385 (Print)
Volume 3, Issue 1, January – March 2016 ISSN 2394-6393 (Online)

# தமிழ் மொழிக் கொள்கை: வாய்மொழி மரபு

அ. மாலதி

*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், மெரினா வளாகம்,சென்னை.05*

smilemalathi@gmail.com

மொழி என்பது ஒரு சமூகச் செயல்பாங்கு. எந்தவொரு தனி மனிதனும் தனக்கென ஒரு மொழியை உருவாக்கிக்கொள்ள முடியாது. குழந்தை ஏற்கனவே மொழி வழங்குகிற ஒரு சமுதாயத்தில் பிறக்கிறது. குழந்தை தன் சமுதாயத்தினர் பேசும் மொழியைக் கற்க ஆரம்பிக்கும் போது அச்சமுதாயத்தினரின் உலகத்தைப் பற்றிய கருத்தையும் தெரிந்து வளர்கிறது. அம்மொழி கற்றலில் குறிகளுக்கும் அவை உணர்த்தும் கருத்துப் படிவங்களுக்கு இடையே உள்ள தொடர்பு குழந்தைக் கற்றுக்கொள்கிறது. இத்தொடர்பு இயற்கையானது என்பதைவிட மரபுவழிபட்டது: ஏற்கனவே தீர்மானிக் கப்பட்டது. குறிப்பிட்ட மொழிக்கே உரியது எனலாம். எனவே, மொழி என்பதும் நம் எண்ணப் போக்குகளின் மீது வலிந்து புகுத்தப்பட்ட பழைமை முயற்சி என்பது பொருந்தும்.

‘மொழியில் உள்ள சொற்களின் பொருள் ஒரு சமுதாயத்தின் ஏற்கனவே வரையறுக்கப்பட்ட அறிவுகிடங்கு ஆகும். இப்பொருளை கற்பதன் மூலமாகக் குழந்தை சமூக மற்றும் பண்பாட்டு மதிப்புகளைக் கற்றுக் கொள்கிறது. இக்கற்றல், மொழி என்னும் ஊடகம் வழி நடைபெறுகிறது. இக்கற்றல் மூலம் குழந்தை தான் பிறந்த சமுதாயத்திற்கு ஏற்ற பாத்திரமாக—ஏற்கனவே நிலை நிறுத்தப்பட்டு உள்ள நம்பிக்கைகளுக்கு உரிய பாத்திரமாகத் தன்னை உருவாக்கிக்கொள்கிறது’ எனக் கூறுவார் ரோஜர் பௌலர் (Roger Fowler) என்பார். சமுதாயத்திற்கும் மொழிக்கும் இடையேயுள்ள இவ்வுறவை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். சமுதாயம் மாறும் தன்மையது. இப்பொருண்மையை ஏற்றுக் கொண்டால் மொழி நிலையானது என்னும் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. காலந்தோறும் மொழியின் உள்ளேயும் புறத்தேயும் மாற்றங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. இவை இவ்வுறவை உறுதிபடுத்துகின்றன. இம்மாற்றங்களை ஏற்கனவே ஒழுங்கு படுத்தப்பட்ட மொழிகளின் விதிகளை ஆவணப்படுத்தும் பொழுது இலக்கணங்கள் தோன்று கின்றன. இவ்விலக்கணங்களின் பரிணாம வளரச்சி தான் மொழியியல் ஆகும்.

தமிழின் இலக்கண மரபு என்று பார்த்தால் இலக்கிய வழக்கு-பேச்சுத் தமிழ் ஆகிய இரண்டும் பற்றிய தனித்தனி விளக்கம், அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளின் ஒப்பீடு, ஒன்றிலிருந்து மற்றொன்றை விளக்குதல் ஆகிய இவை பற்றி யெல்லாம் ஆராய வேண்டி உள்ளன. தொல்காப்பியர் இவ்விரண்டு நிலைகளையும் பற்றிக் குறிப்பிட்டாலும், இலக்கண விளக்கம் என வரும் பொழுது அவர் இலக்கிய வழக்கையே எடுத்துக் கொண்டார். அவருக்குப்பின் வந்த இலக்கண ஆசிரியர்களும் பேச்சு வழக்கினைப் பற்றிய விளக்கம் தர முயலாமல், தொல்காப்பியர் காட்டிய இலக்கிய வழக்கு பற்றியே பேசிச் சென்றதால், தமிழ் மொழியைப் பற்றிய தகவல்களை, அதன் பேச்சுத் தமிழ் வழக்குச் செய்திகளை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது பாதுகாக்கத் தவறி விட்டோம் என்று வருந்த வேண்டியுள்ளது. விளக்கும் முறையும், நுட்பமும், கோட்பாடும் கலைச்சொற்களும் அவற்றைப் பயன்படுத்தி முன்மாதிரியாக ஒரு வழக்கு நெறியை விளக்கி, இலக்கண முறையை அடியொற்றித் தம் காலத்துப் பேச்சு வழக்குகளுக்கும் இலக்கணம் விளக்கப்படுகிறது.

> தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
> பன்று யருவா அதன்வடக்கு – நன்றாய
> சீத மலாடு புனல்நாடு செந்தமிழ்சேர்
> ஏதமில் பன்னிருநாட் டெண்

என்றத் தனிப்பாடல் வழி தமிழ் வழக்குகள் குறித்துப் பேசப்படுகின்றது.

மரபுவழி இலக்கணத்தார் தமிழின் இலக்கிய வழக்கை மட்டுமே விளக்கப் புகுந்ததால் தமிழின் வரிவடிவத்தைக் கொண்டே அதன் ஒலியமைப்பையும் விளக்கிவிட்டன. குறிப்பாக மொழியில் பயிலும் அத்தனை ஒலிகளையும் குறிக்காமல் அவற்றின் வரன்முறை அடிப்படையில் ஒலியன் என்ற அடிப்படை ஒலி யாகும் தகுதியைப் பெற்ற ஒலிகளுக்கு மட்டுமே பெரும்பாலும் குறியீடுகள் நம் வரி வடிவத்தில் உள்ளன. அதாவது ‘க’என்ற ஒரே வரிவடிவம் கடல் என்னும் பொழுது ‘ம’ என்றும் தங்கம் என்னும் பொழுது ‘ப’ என்றும் பகல் என்னும் பொழுது ‘ா’ என்னும் மூன்று ஒலிகளையும் தன்னுள் அடக்கிச் செயல்படுவதே பேச்சு தமிழின் தன்மையாகும்.

மொழியின் பரணாம வளர்ச்சி மாறிவரும் சமுதாயத் தேவைகளை அடிப்படையாக் கொண்டது. இவ்வகையில் இலக்கணமும் மொழியியலும் நிறைவேற்றி வந்திருக்கின்ற சமூகத் தேவைகளை வரலாற்று நோக்கில் காண்பதும் ,இன்றைய தேவைகளை இனங்கண்டு இலக்கணம் மற்றும் மொழியியல் பயன்பாட்டை வலியுறுத்துவதும் இக்கட்டுரையின் நோக்கங்களாகும்.

தமிழ் இலக்கண வளர்ச்சி வரலாற்றைக் காலந்தோறும் மாறி வந்திருக்கின்ற தமிழ்ச் சமுதாய வளர்ச்சி வரலாற்றோடு இணைத்துப் பார்ப்போமேயானால் முக்கியமாக ஐந்து காலக்கட்டங்களில் தமிழ் இலக்கணம் புது வடிவம் பெற்று வளர்ந்து வந்துள்ளதை அறியலாம். தொல்காப்பியம், வீரசோழியம், பிரயோக விவேகம், ஐரோப்பிய தமிழ் இலக்கணங்கள், மொழியியல் இலக்கணங்கள் என்னும் ஐவகை இலக்கண மரபுகள் இக்கால கட்டங்களை பிரதிபலிக்கின்றன. இவற்றுள் தொல்காப்பிய இலக்கண மரபைப் பழைய இலக்கண மரபோடு ஒப்பிடலாம். பழைய கிரேக்க இலக்கண அறிஞர்கள் இலக்கணம் என்னும் சொல்லுக்குப் படித்தல் மற்றும் எழுதுதல் கலை (art of reading and writing) எனப் பொருள் கூறுவர். இவ்விளக்கம் கிரேக்க இலக்கண அறிஞர்களின் இலக்கியச் சார்பைக் காட்டுகிறது. ‘இலக்கியத்தினின்று எடுப்படுவது இலக்கணம்’ என்னும் தமிழ் இலக்கண மரபு இக்கால இக்கிரேக்கக் கோட்பாட்டை உடையது எனலாம். ஆனால், தொல்காப்பியத்திற்கு பின்னால் எழுதப்பட்ட சில தமிழ் இலக்கணங்கள் அம்மரபிலிருந்த மாறித் தனி இலக்கணக் கோட்பாடுகளை உருவாக்கின. இக்கோட்பாட்டு உருவாக்கத்திற்குத் தமிழ்ச் சமுதாய மாற்றங்கள் அவ்வப்போது அடிப்படையாயின. களப்பிரர் காலந்தொட்டு மாறிவந்த தமழ்ச்சமுதாயத்தில் இலக்கணத்தின் தேவையும் பயன்பாடும் மாறி வந்துள்ளன என்பதை நம்மால் அறிய

முடிகிறது. இடைக்காலச் சோழர் காலத்தில் எழுதப்பட்ட வீரச்சோழியத்தை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

சமுதாயத் தேவைகள் மொழியில் ஏற்படுத்திய கட்டாய வடிவங்களே இலக்கண வளரச்சியில் நாம் காணும் இப்பல்வேறு மாதிரிகள் எனலாம். இவ்வாறு இலக்கணம் சமுதாயம் வற்புறுத்தும் மொழி மாற்றங்களை உள்வாங்கி வளர்கிறது. இதன்மூலம் ஒரு சமூகத் தேவையை நிறைவு செய்வதும் அதன் நோக்கமாகி விடுகிறது. இருபதாம் நூற்றாண்டின் அறுபதுகளில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு பல்கலைப் பாடமாக மொழியியல் அறிமுகமானது. இலக்கணத்தின் பரிணாம வளர்ச்சியின் உச்ச நிலையாக மொழியியல் அறிமுகமானாலும் இரண்டாயிரம் ஆண்டு மரபிலக்கணச் சிந்தனையில ஊறிவிட்ட மரபிலக்கணத்தாரிடம் இவ்விலக்கண அணுகுமுறை எளிதாச் செல்வாக்குப் பெற முடியவில்லை. அருப்பினும் இநதிய மொழிகளுள் எந்த மொழியிலும் இல்லாத அளவிற்கு மொழியியல் கோட்பாடுகளின அடிப்படையில் மொழியியல் இலக்கணங்கள் (Linguitics grammars) தமிழுக்கு எழுதப்பட்டன. முழுவதுமாக விளக்க முற்பட்ட இலக்கணங்கள எனக் கூறுவதைக் கோட்பாட்டு மொழியியல் கொள்கைகளை மதிப்பீடு செய்த இலக்கணங்கள் எனக் கூறலாம்.

ஒரு மொழியின் இலக்கண உருவாக்கம் சமூகத் தேவையை அடிப்படையாகக் கொண்டது எனப் பார்த்தோம். குாலமாற்றத்திற்கேற்ப இலக்கண உருவவாக்கத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்து வந்திருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட தொல்காப்பியம் இக்காலத் தமிழ் அமைப்பை விளக்கப் போதுமானதாக இல்லை என்ற உண்மை ஒன்றே ஓர் இலக்கணத்தின் நோக்கமும் இவ்விலக்கணம் மேற்கொண்ட மொழித்தரவும் காலந்தோறும் வெவ்வேறு மொழிச்சூழலையும நோக்கத்தையும கொண்டு இலக்கணங்கள் எழுதப்பட்டு வந்திருக்கின்றன என்பதை விளக்கப்போதுமானவையாகும். ஆங்கில மொழியை எடுத்துகாட்டாகக் கொள்ளலாம். இம்மொழியில் ஒரு நூற்றாண்டுக்குள் பல்வேறு வகையான இலக்கணங்கள எழுதபடபட்டுள்ளன. வரலாற்று இலக்கணம் (Historical grammar), வருணனை இலக்கணம் (Descriptive grammar), ஆக்கமுறை இலக்கணம் (Generative grammar), மாற்றிலக்கணம் (Transformationaal), முறையிலக்கணம் (Systemic grammar), அடுக்குநிலையிலக்கணம் (Stratificational grammar), உறவுமுறை இலக்கணம் (Relational grammar), வேற்றுமையிலக்கணம் (Case grammar), வகை தர இலக்கணம் (Scale and category grammar), பயிற்று இலக்கணம் (Pedagogic grammar) உறழ்வு இலக்கணம் (contrastive grammar), ஒப்பியல் இலக்கணம் (Comparative grammar), இருமொழிய இலக்கணம் (Bilingual grammar), பொது இலக்கணம் (Universal grammar) போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இலக்கணங்கள் எழுதுவதற்கான உத்திகளை வரையறுத்ததோடு மட்டுமில்லாமல் சமூகத்தின் எல்லா நிலைகளிலும் பொதுவான மொழி மேம்பாட்டை நோக்கி 1940-களில் மொழியியல் வளர ஆரம்பித்தது. பயிற்று இலக்கணங்கள் எழுதுவதற்குக் கோட்பாட்டு மொழியியல் அளித்துள்ள நன்கொடை ஏராளம். அத்துடன் மொழி பயிற்றுவிக்கும் போது எதிர்கொள்ளும் சிக்கல்களுக்குத் தீர்வு காணப் பயிற்று முறைகள், பயிற்று உத்திகள், பாடநூல்கள் தயாரித்தல், மொழிக்கல்வி உளவியல் மற்றும் சமூகவியல் பிரச்சனைகள் என இன்னோரன்ன வகைகளில் மொழியியல் சாதித்துள்ள சாதனைப் பட்டியல் மிக நீளமானது. இன்று உலகெங்கும் சுமார் ஒரு கோடித் தமிழர்கள் வருகின்றனர். இவர்களுள் பலர் இரண்டாவது மொழியாகவும் கற்று வருகின்றனர். இப்பயிற்றுச் சூழலுக்கேற்ப தமிழ்ப் பயிற்றுமுறைகள், பாடநூல்கள் ஆகியவை இன்னும் சரியாகவும், பொருத்தமாகவும் உருவாக்கப்படவில்லை. தாய்மொழிக் கல்விலேயே இன்று ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றை அரசின் மொழிக்கல்விக் கொள்கை, மொழிச்சூழல், கற்போரின் சமூகப் பொருளாதாரப் பின்னணி, பாடநூல்கள், ஆசிரியர் பயிற்சி, பயிற்று முளை, தேர்வு முறை என்பவனற்றின் அடிப்படையில்அறிவியல் நோக்கில் ஆய்வு மேற்கொண்டு மொழிக்கல்வித் தரத்தை உயர்த்துவதில் பல இடர்பாடுகள் இருந்து வருகின்றன. இவ்வாய்வுப் பணிகளில் மொழியியலறிவும் மொழியியலறிஞர்களும் பொருத்தமாகப் பயன்படுத்தப்படவில்லை. ஆங்கிலக் கல்வியை வளர்ப்பதிலும் பரப்புவதிலும் இன்று மொழியியலாளர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

மொழி பயிற்றுவித்தல் அல்லது மொழி கற்பித்தல் என்பது பயன்பாட்டு மொழியியல் (Applied Linguistics) எனக் கோட்பாட்டு மொழியியலுக்கு அணையாக இன்று வளர்ந்து வருகிறது. உலகப்போரில் அமெரிக்கா தோல்வியைத் தழுவியதற்குச் ஜப்பானிய மொழியும், ஜெர்மன் மொழியும் இராணுவ வீரர்களுக்குத் தெரியாமல் போனதும் ஒரு காரணம் என மொழியியலாளர்கள் கருத்து தெரிவித்தபோது, இம்மொழிகளைக் கற்பிக்க அமெரிக்கா எடுத்த முயற்சியின் வளர்ச்சி வடிவமே இன்றைய மொழியியல் பிரிவின் தனி வளர்ச்சி என்றால் மிகையில்லை. இன்று தாய் மொழியாளர்க்கு அணையாகப் பிற மொழியாளர் தமிழ்மொழி, பண்பாடு, இலக்கியம், சமூகம் அகியவற்றின் மீது ஈடுபாடு காட்டி வருகின்றனர். இவர்களின் தேவைகளை நிறைவு செய்வதில் மொழியியலுக்கு மிகுந்த பங்கு உண்டு.

இன்றைய இலக்கிய வளர்ச்சியில் பேச்சுமொழியின் பங்கு குறிப்பிடத்தக்கது. மோழியியல் வரலாற்றில் அமைப்பு மொழியியலைப் (Structiral Linguistics) பற்றிய சிந்தனை வளரத்தொடங்கிய காலத்திலேயே இலக்கியவியலிலும் கவிதை மொழியை அமைப்பியல் கொள்கைகளின் அடிப்படையில் விளக்கும் போக்கு வளர ஆரம்பித்தது. இலக்கியத் திறனாய்வில் மொழியியலின பங்கை ஹெரால்டு ஒயிட்ஹால் (Harold Whitehall) என்பவர், 'கணிதத்தைவிட்டு எந்த அறிவியலும் வளர்ந்துவிட இயலாது என்பது போல் எந்த இலக்கியத் திறனாய்வும் அதன் மொழியைவிட்டு வளர்ந்துவிட முடியாது' என்று கூறுகிறார். ஓயிட்ஹாலின் இக்கூற்றைச் சற்று மிகைக்கூற்றாக

கொள்ளலாம். இருந்தாலும் இலக்கியத்திறனாய்வில் சில இலக்கியத் திறனாய்வாளர்கள் கூறுவதுபோல் மொழியியலின் பங்கை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட முடியாது.

மொழியிலாளர்களும இலக்கியத் திறனாய்வாளர்களும் இலக்கிய மொழியை (Literary language) பல்வேறு கோணங்களில் அணுகி ஆராய்ந்து வந்துள்ளனர். பிராகு மொழியியல் சிந்தனையாளர்கள் சாதாரணக் கருத்தாடலுக்கும் (Ordinary discourse) கவிதைக் கருத்தாடலுக்கும் (Potic discourse) இடையேயுள்ள முக்கிமான வேறுபாடுகளை ஆராய்ந்தள்ளனர். குவிதைக் கருத்தாடல் சாதாரணக் கருத்தாடலின் பின்னணியில் வடிக்கப்பட்ட ஒன்று என்பது இவரது கருத்து. வின்பிரட் நவொத்தே (Winfred Nowottay) என்பார் சாதாரணக் கருத்தாடலிலிருந்து கடுமையான முயற்சிக்குப் பின் வடித்தெடுக்கப்பட்டு இலக்கியக் கலைஞன் பயன்படுத்தும்

கருத்தாடல் கவிதைக் கருத்தாடல் என்கறார். இக்கவிதைக் கருத்தாடலை விளக்கும் இலக்கியப் படிப்பாக இலக்கிய நடையில் (Literary stylistics) இன்று மேலை நாடுகளில் வேகமாக வளர்ந்து வருகிறது.

தமிழில் இலக்கண ஆய்விற்குப் புத்துயிரும் புது ஊக்கமும் அளிக்க மொழியியல் படிப்பால் இயலும். இலக்கணம் சார்ந்த ஆய்வு மாணவர்களுக்கும், திறனாய்வாளர்களுக்கும் மொழி எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றிய அறிவு இருத்தல் அவசியம். இலக்கிய ஆய்வின்போது சில பகுதிகளில் மொழிநுட்பம் பற்றிய அறிவு (Mechanics of language) தேவைபடுகிறது. எடுத்துகாட்டாக, யாப்பமைப்பைக் கூறலாம். மோழியியல் இது குறித்த தகுந்த விளக்கத்தையும், பகுப்பாய்வு உத்தியையும் தரவல்லது. எல்லாவற்றுக்கும் மேலாக மொழியியல் முன்னேறி வருகின்ற ஒரு விஞ்ஞானம். இச்சமூக விஞ்ஞானத்தை நாம இன்னும புறந்தள்ளுவோமேயானால் இ லக்கண நடையியல், இலக்கண கருத்தாடல்கள், இலக்கண திறனய்வு என்னும் இலக்கிய ஆய்வுப் போக்குகளில் மேலும் பின்தங்கி விடுவோம் என்பது உறுதி.

பேராசிரியர் மாக்ஸ்முல்லர் தம்முடைய 'மொழியறிவு பற்றிய சொற்பொழிவுகளின் இரண்டாம் வரிசை' (Lectures on the Science of Language> Second Series) என்ற நூலில் ஒன்றுக்கு மேற்பட்ட மெய்யெழுத்துக்களை முதற்கண் பெற்று வரும் சொற்களே, பெரும்பாலும் ஒலிச் சிதைவுகட்கு உள்ளாகின்றன. உயிர்கள் இடையீடின்றி, சொல்லின் முதலில் இரண்டு அல்லது மூன்று மெய்யெழுத்துக்கள் வரின், அவற்றைத் தெள்வாக ஒலிக்கப் பெருமுயற்சி தேவைபடுமாதலின் அம்மெய்யெழுத்துக்களில் ஒன்று, தெளிவின்றி வொலிக்கப்பெற்று இறுதியில் கைவிடவும்படும் என்பதை நாம் எளிதில் புரிந்து கொள்ளலாம். பெரும்பாலான சொற்கள் ஒலிச் சுருக்கத்தையே தம் பிறவிக் காரணமாகக் கொண்டுள்ளன. அதாவது ஈரசைகளை ஓரசையாக ஒலித்து காலத்தையும் காற்றையும் குறைத்தல்: இவ்வாறு அசைகளைக் குறைத்துச் சுருங்கிய வாய்பாட்டால் ஒலிக்கத் தொடங்கியது பேச்சுமொழி.

### மெய் இடம்மாறுதல்

தமிழில் விரைவு காரணமாகவும், தெளிவு, எளிமைக் காரணமாகவும் மெய்யெழுத்துக்கள் ஒரு சில இடங்களில் இடம் மாறி வரும். இம்முறை, பெரும்பாலும் மக்கள் வழங்கும் பேச்சு மொழியில் மட்டுமே காணப்படும் என்றாலும் அது அதற்கு மட்டும் உரிமையாகாது. துசை என்ற தமிழ்ச்சொல் இம்மெய்நிலை மாற்றத்தின் விளைவேயாகும். மேய்யெழுத்துக்கள் இடம் மாறியதால் வல்லொலி வல்லெழுத்து, மெல்லொலி வல்லெழுத்தாக மாறி சதை என வந்தது. குதிரை என்ற சொல்லும் இவ்வாறே பேச்சு தமிழில் குரிதை, குதர எனப் பெரும்பாலும் ஒலிக்கப்பெறும். இம்மெய்ம் மாற்றத்தின் விளைவால், ஒரு பொருளையே குறிக்க வரும் சொற்கள், தமிழில் ஒரு வடிவிலும் தெலுங்கு கன்னடங்களில் வேறு வடிவிலும் வரக் காண்கிறோம். நாபி எனப் பொருள்படும் கொப்புள் என்ற தமிழ்ச்சொல் தெலுங்கில் பொக்கிலி எனவும் மலையாளத்தில் பொக்குள் பொக்கில் எனவும் வரும். படர் என்ற தமிழ் வினைச்சொல் கன்னடத்தில் பரடு என வரும்.

### உயிர் இடம்மாறுதல்

வியப்பூட்டும் உயிர்நிலை மாற்றங்கள் பேச்சு மொழியில் நிகழ்கினறன. இந்நிலை மாற்றம் பெரும்பாலும் மொழி முதலில் உயிரெழுத்துப் பெற்று குறுகிய மூவசைகளாலாகிய சொற்களிலேயே நிகழும். இரண்டாவதாக நிற்கும் உயிர் மறைந்துபோக, மொழி முதல் உயிர் இரண்டாம் அசையில் சென்று தங்கி முறைந்துபோன உயிருக்கு ஈடாக நெடிலாக்கப்படும். ஊயிர்கள் நிலைமாறுவதோடு ஒருயிர், பிறிதோருயிரோடு இரண்டறக் கலப்பதும் நிகழும். அவர் இவர் என்ற தமிழ்ச் சுட்டுக்கள் கன்னடத்தில் அவரு இவரு என வரும். ஓரினம் என்ற உறவுடைமையால் இச்சொற்களே தெலுங்கிலும் இருத்தல் வேண்டும். ஆனால் அதில், அவரு என்பதற்குப் பதிலாக வாரு எனவும், இவரு என்பதற்குப் பதிலாக வீரு என்பதும் இருக்கின்றன. சுட்டுப்பெயர்கள் மட்டுமல்லாமல் சில இயற்பெயர்களும் இம்மாற்றத்தைப் பெறுகின்றன.

உரல் என எழுதப்பெற்று ஒரல் என ஒலிக்கப்பெறும் தமிழ்ச்சொல் சில மாவட்டங்களில் ஒரலு என ஒலிக்கப்பெறும். தெலுங்கில் ரோலு என்றே அழைக்கப்பெறுகின்றது.

### சிறப்புமெய் விலக்கல்

சொற்களுக்கிடையில் சில இடையின மெய்களை அவை சாரியையாகவோ, சந்தியாகவோ வராது, வேர்ச்சொல் பகுதியாகவே வந்துள்ளன என்பதையறியாமல், முற்றிருமாக விலக்கும் ஒரு வழக்கம் தெலுங்கு கன்னட மொழிகளில் உள்ளது. தமிழில் நெருப்பு தெலுங்கில் நிப்பு எனவும்: எலும்பு எம்மு எனவும்: உடல் ஒள்ளு எனவும்: பொழுது பொத்து எனவும்: எருது எத்து எனவும் மாற்றப்படும்.

### எடுத்தலோசை

இந்தோ-கிரீக் மொழிகளில் காணப்படுவது போன்ற எடுத்தலோசை தமிழில் இல்லை என்றாலும் எடுத்தலோசை ஆளும்முறை, அம்மொழிகள் அறியாத ஒன்றன்று. எடுத்தலோசையைச் சொல்லின் முதலசையில் கொள்ளும் தமிழ் ஒலிப்பு முறையில் விதிவிலக்கொன்று உண்டு. தமிழ்ச் செய்யுள் நடையில் ஒரே சொல், படர்க்கை வினைமுற்றாகவும், படர்க்கை வினையாளணையும் பெயராகவும் வரும். ஓதுவான் என்பது உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, எதிர்கால வினைமுற்றாகவும் வரும். ஓதுகின்றவன் எனப்பொருள்பட்டு வினையாலணையும் பெயராகவும் வரும். இவ்வாறு ஒரே சொல் இருபொருள்பட வழங்குவதைக் கண்ட தமிழிலக்கண அறிஞர்கள் பொருள்களிடையே தோன்றும் இவ்வேற்றுமைய, அச்சொல்லின் எடுத்தலோசை வேறுபாட்டினாலேயே வெளிப்படுத்துதல் வேண்டும் என கருதினர். அம்முறைப்படி ஓதுவான் எனும் சொல் வினைமுற்றுப் பொருளில் வருமாயின் எடுத்தலோசை அதன் முதலசையில் நிற்கும். அது வினையாலணையும் பெயராக வரின், வினைமுற்று விகுதியே எடுத்து ஒலிக்கப்பெறும்.

ஓரிடத்திற்கும் மற்றோர் இடத்திற்கும் மொழி, ஒலித்திரிபாலும், சொல்லாட்சியாலும், சொல்லுக்குக் கொள்ளப்படும் பொருள்மரபாலும், வாக்கிய அமைப்பாலும் மாறுபடுகின்றன.

### ஒலித்திரிபு - உயிரொலிகள்

ஒலிதிரிபுகளுக்கு அடிப்படைக் காரணம் சில இடங்களில் வாய் அங்காப்பு மிகுதியும் சில இடங்களில் குவிவு மிகுதியாக இருப்பதுவும் எனலாம். தமிழில் அங்காப்போடு ஒலிக்கும் சில ஒலிகள் ஈழத்தில் இதழ்குவிவோடு ஒலிக்கப்படுகின்றன. ஆம் என்பதுஓம் எனவும், காப்பி என்பதைக் கோப்பி என

ஒலிக்கின்றனர். இந்த அகரம் ஒகரமாக ஒலித்தல் ஈழ பேச்சு இயல்பிற்கும் தமிழ்ப் பேச்சுமுறைக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடாகும். இந்த மாறுதலேயன்றி உயிரொலிகள் இடத்துக்கு இடம் மாறி அமையும்.

இ > எ ஆக மாறுதல்: இலை–எலை, இழவு–எழவு, விறகு–வெறகு

உ > ஒ ஆக மாறுதல் உடல்-ஒடல், உதை–ஒதை, உரல்-ஒரல், உயர்த்தி– ஒசத்தி

உயிர் இடம் பெயரல்: எனக்கு-னேக்கு, உனக்கு-னேக்கு

முதல் நீளல்: துகள்-தூள், அகப்பை-ஆப்பை, தொகுப்பு-தோப்பு, அகத்துக்கு-ஆத்துக்கு, பொழுது-போது, அகமுடையான்-ஆம்படையான்.

## மெய்யொலிகள் திரிபுகள்

(i) ழ: தமிழுக்கே உரிய சிறப்பு ழகரம் இடத்துக்கு இடம் மாறி ஒலிக்கின்றது. வாழைபழம்-வாயபயம் ழ-ய வாக மாறுகிறது. சில பகுதிகளில் (சிதம்பரம்) ழ-ஷ ஆக ஒலிக்கின்றது. (ii) ற: றகரத்திற்கும் ரகரத்திற்கும் ஒலி நுட்ப வேறுபாடு பேச்சு மொழியில் அற்று வருகிறது எனலாம். ஈழத்தில் றகரம் (t)கரமாகவே ஒலிக்கப்படுகிறது. இதுவே தொல்காப்பியர் காலத்து ஒலியும் ஆகும் எனக் கருதுவர். ஓன்று என்பதை ஒன்டு (t) வாக ஒலிப்பர். றகரம் பேச்சு மொழியில் தகரமாகவும் மாறுகிறது. பற்று வரவு – பத்து வரவு, காற்றடிக்குது – காத்தடிக்குது.

## இடையின ஒலிகள் உகரம் பெறுதல்

சொல்-சொல்லு, கள்-கள்ளு, பெயர்-பேரு,மோர்-மோரு,பாழ்-பாழு,

கு > வ: பாகற்காய்-பாவக்காய், மகள்-மவள், பகல்-பவல்

ச: பலவாறாக ஒலிக்கப்படுகிறது. சோறு-ஸோறு, சாமான்-ஸாமான் & ஜாமான்: சரிகை-ஸரிகை & ஜரிகை

த > ச: மைத்துனன்-மச்சான், வைத்து-வச்சி, மாதம்-மாசம், பெரிது-பெரிசு, வயது-வயசு, சிறிது-சிறிசு

ன்ற் > ண்ண: ஒன்று-ஒண்ணு, கன்று-கண்ணு

ந்த் > ஞ்ச்: ஐந்து-அஞ்சி, தெரிந்து-தெரிஞ்சி

ய > ஸ: பையன்கள்-பசங்க, கயம்-கஸம்

த > ர: விதை-விரை

## சொற்பொருள் வேறுபாடு

இடத்துக்கு இடம் சொற்களின் பொருள் வேறுபடுதலும் உண்டு. மேடை- மாடி வீடு (திருநெல்வேலி) பேச்சு மேடை (பிற பகுதிகள்):

பந்தல்-அமங்கல நிகழ்ச்சிக்கு போடப்படும் பந்தல் (செட்டிநாடு), காவணம் என்பதே மணப்பந்தலைக் குறிக்கும் (புதுக்கோட்டை)

வருத்தம்- துன்பம் (தமிழ்நாடு), நோய்வாய்ப்படுதல் (ஈழ நாடு)

## வினை வடிவங்களில திரிபு

பெயர்ச்சொற்கள் இடத்துக்கு இடம் திரிபு அடைவதைக் காட்டிலும் வினைச்சொற்களே பெருமளவில் ஒலித்திரிபடைகின்றன.

இருக்கிறது-இருக்குது, இருக்கு, கீது,
வருகிறான்-வரான், வாரான்
அவர்கள்-அவங்க,அவாள்,அவக
செய்தான்-சேய்ஞ்சான், செஞ்சான், செய்துவிட்டு, செய்துபோட்டு

வர்ரான் என்றால் வருவது உணர்த்தப்படும். வருகிறான் என்பது நீண்ட ஒலி. இலக்கியப்பேச்சு, இலக்கண அமைப்புக் கெடாமல் காக்கிறது. பேச்சு மொழி எவ்வளவு தேவையான ஒலிகள் போதுமோ அவ்வளவு ஒலிகளைக் கொண்டு இயங்குகிறது. இலக்கண மொழி தேவைக்கு மீறிய ஒலிகளைப் பெற்று விளங்குகிறது. பேசும்பொழுது வாயின் அசைவும், குரலில் ஏற்றத்தாழ்வும், கைச் செய்கையும், சூழ்நிலையும், சொல்லும் சந்தர்ப்பமும் பேசும் மொழிகளுக்குத் துணை செய்கின்றன. மேலும் பேசும்பொழுது கருத்துவேகம் மிகுதி. ஆதனால் சொற்சிதைவுகளைப் பொருத்படுத்துவதில்லை. தேவைக்கு மீறிய ஒலிகள் சபல நேரங்களில் வெறுப்பை உண்டாக்கிவிடும். ஆதனால் பேச்சில் தேவைக்கு வேண்டிய அளவே ஒலிக்கப்படுகின்றன. சூழலுகேற்ற வகையில் மொழி வடிவம் அமைதல் இயற்கையாகும். குறைந்த வடிவம் பேச்சு வடிவம். முழு வடிவம் இலக்கண வடிவம். பெரும்பாலும் தேவைக்கு மீறிய ஒலிகள் இருப்பது தான் மொழியின் இயல்பாகக் கருதப்படுகிறது.

மொழித்தொடக்கம்: மிகப் புராதன காலத்தில் ஒருவர் மற்றொருவரிடம் கருத்தைத் தெரிவித்துக்கொள்ள எடுத்த முயற்சிகள் எத்தன்மையவாயினும், அம்முயற்சிக் தான் இவ்வுலகில் பேச்சின் தொடக்கமாகும். ஆனால் இப்பேச்சு-முயற்சியை மொழியெனக் கருதிக் கொள்ளுதலாகாது. மொழி மிகப் பிற்பட்ட காலத்தில்தான் உருவாதல் கூடும். பேச்சு வெகுகாலமாக வழகத்தில் வந்து, சாதாரணக் கருத்துக்களையெல்லாம் வெளியிடுதற்குத் தக்க பேச்சு வடிவங்கள் பலபலவாய் நிரம்பி, பலரும் பொருள் தெரிந்து கொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்ட பின்தான் மொழி என்பது தொடங்கதல் இயலும். பேச்சின் வடிவங்கள் நிலைப்பட்ட தன்மையை அடைந்து, தொடர்ந்து நிகழும் போதும், தனித்து நிகழும் போதும் குறிப்பிட்ட நியமங்களுக்கு அல்லது விதிகளுக்கு உள்ளடங்கி ஒழுகும் வரையிலும் மொழி என்பது அமையவில்லை. ‘மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிப்போல்’ என்று பரஞ்சோதி முனிவர் கூறியது முரணாகவே அமைகின்றது. மொழி என்ற அளவில் அது இலக்கண விதிக்கு உட்பட்டேயுள்ளது. டாக்டர்.எச்.ஏ. கார்டினர் இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை தெளிவாக்கியுள்ளார். ‘பேச்சின் மூல அளவை சொல்:மொழியின் மூல அளவை வாக்கியம்’ சொற்கள் உண்டாகும் பொழுது பேச்சு என்பது நிகழும். ஆகவே, பேச்சு என்பது சொற்களால் ஆகியது. இச்சொற்கள் ஒருநெறிப்பட்டு வாக்கியமாய் அமையும் நிலை வந்த பின்னே மொழி தோன்றுதல் சாத்தியமாகும்.

மாக்ஸ்முல்லரும் பிற அறிஞர்களும் இவ்வகைச் சொற்களால் எழுந்த கொள்கைகளைக் கேலி செய்து பூபூ கொள்கை, பௌவௌ கொள்கை டிங்டாங் கொள்கையென கூறி இகழ்ந்தனர். இக்கொள்கைகளுக்கு மாறாக ஒவடவொரு உயிர்களுக்கும் தனக்குரிய இயற்கையோசை ஒன்று உண்டெென கூறினார்கள். ஆனால் மாக்ஸ்முல்லர் விரைவில் இக்கொள்கையை கைவிட்டார். ஒரு கொள்கையையும் உறுதியாகத் தெளிவுபடுத்த முடியாது என்ற காரணத்தால் சொற்களின் தோற்றம் குறித்த ஆய்வு பயனற்றது என்ற முடிவுக்கு வந்தனர்.

## இறுதியாக

தமிழ் இலக்கண வளர்ச்சியில் பின்னடைவு, ஏற்பட்டிருப்பதற்கு ஒரு முக்கிமான காரணத்தை இங்குச் சுட்டலாம். இக்காரணம் தமிழ் இலக்கணம் அறிஞர்களின் மொழி உணர்வோடும், மொழியியல் மீதுள்ள மனப்பாங்கோடும் தொடர்புடையது. மொழி மாறும் தன்மையது என்னும் யதார்த்தை நம் இலக்கண அறிஞர்கள் இன்றும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

மொழி மாற்றம் தவிர்க்கப்பட வேண்டும் என்பது இவர்களது இலக்கண வரம்பிற்கு உட்பட்டவை அல்ல. ஆனால் பேச்சிலும் எழுத்திலுமாகக் காலந்தோறும் மாறி வளர்ந்துள்ள தமிழ் இலக்கணம், இலக்கணம் எழுத முனைவோருக்குச் சவாலாக முன்நிற்கிறது. இச்சவாலை எதிர்கொள்ள வேண்டுமானால் பாராம்பரிய இலக்கண உத்திகள் போதாது. சில நவீன உத்திகள் தேவைப்படுகின்றன. இவ்வுத்திகளை மொழியியல் வழங்க வல்லது. இலஇலக்கணம் வரையப்படாத அமெரிக்க இந்திய மொழிகளுக்கு இலக்கணம் எழுத உருவான உத்திகளின் தொகுப்பே மொழியியல் என்பதை இங்குச் சுட்டிக்காட்ட வேண்டும். இக்காலத் தமிழுக்கு இலக்கணம் எழுத முனையும்போது ஏற்படும் பல தயககங்களுக்கு மொழியியல் உத்திகளால் விடைகாண முடியும். இலக்கண விதிகளை நூற்பாக்களாக தொகுத்துச் சொல்லுவது மரபிலக்கண அணுகுமுறை. நூற்பாக்களை மனப்பாடம் செய்து ஒப்புவித்தல் என்னும் மொழிக்கல்வி மரபிற்கேற்ற அணுகுமுறை என இதனைக் கூறலாம். இன்று இலக்கணத்தின் தேவை மொழிக் கலவிவோடு மற்ற நிலைகளிலும் விரிந்துள்ளது. எனவே, இலக்கண அமைப்பு உலக இலக்கண உருவாக்கத்தால் இன்று போற்றப்படுகிறது. தமிழில் இவ்விலக்கண அணுகுமுறையை மேற்கொள்ள எதிர்மனப்பாங்கு தடையாக உள்ளது. இத்தடை அகற்றப்பட்டாலொழிய தற்கால மொழித்தரவுகளின் அடிப்டையில் இலக்கணம் எழுதுவது சாத்தியமன்று.

### துணைநின்ற நூல்கள்

[1] செந்தமிழ்ச் செல்வி, திங்கள் வெளியீடு, நாற்பத்தேழாம் சிலம்பு, திருவள்ளுர் ஆண்டு, 1958-59, தென்னிந்திய தமிழ்ச் சங்கம், சென்னை – 108.

[2] வரதராசன்.மு., மொழியியற் கட்டுரைகள் (முதல் பகுதி), பாரிநிலையம், சென்னை.

[3] கந்தையா பிள்ளை, நமது தாய்மொழி, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1958

[4] வையாபுரிப் பிள்ளை. எஸ்., சொற்கலை விருந்து, பாரி நிலையம், சென்னை, 1962.

[5] சூரியநாராயண சாஸ்திரியார்.வி.கோ., தமிழ் மொழியின் வரலாறு, சுவாமிநாதன் வி.க. , புக்ஸெல்லர் அன் பப்ளிஷர், மதுரை, 1927.

[6] Mu.Va as an Essayist Ibid., P. 179-181.

[7] Subramanian.S.V., Ghadigachalam.N. (ed), Literary Heritage of the Tamils, International Institution of Tamil Studies., Madras, 1981.

[8] Robins.R.H., A short History of Linguistics, London, 1967

[9] Berezin F.M., Lectures on Linguistics, Moscow, 1969